REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 18உ செவ்வாய் (3—9—57) ★ வெளியூர்: ஆவணி 19உ புதன் (4—9—57) [இதழ் 69

இந்தியாவுக்கு ரூ. 300 கோடி நஷ்டமாம்!

கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் வெள்ளச் சேதம் காரணமாய் இந்தியாவுக்கு சுமார் ரூ. 300 கோடிக்குமேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்!

உயிர்ச் சேதம், கால்நடைச் சேதம் ஆகியவை நீங்கலாக, பயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட நஷ்டம் மட்டும் சுமார் ரூ. 270 கோடியாகும்; நிவாரண நடவடிக்கைகளுக்கு மேலும் சுமார் ரூ. 51 கோடி செலவாகியிருக்கிறது.

வெள்ளங்கள் காரணமாய் மீண்டும் மீண்டும் நஷ்டமெதுவும் ஏற்படாதிருக்குமானுல், இந்தியாவின் தேசிய வருமானம் சுமார் ரூ. 100 கோடி அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

'மாடப் புருவும்-வல்லூறும் ஒன்ருகச் சேர்ந்து வாழ முடியுமா?'

'ஒரே கூட்டாட்சியின்கீழ் தென்னவர் ஒன்றுபட முடியும்...!'

'ஆனுல், தமிழரும்—வடவரும் ஓராட்சியின்கீழ் இயங்கமுடியாது'

இயற்கையின் சூழ்நிலையைச் சுட்டிக்காட்டி பொதுச்செயலாளர் தெளிவுரை

"இயற்கையே நாட்டைப் பிரித்து வைத்திருக்கிறது; வடக்கிலிருந்து காற்றடித்தால், "வாடை வீசுகிறது; இது உடம்புக்கு ஆகாது; கதவை இழுத்துச் சாத்தடா' என்கிருன், தமிழன்; அதே நேரத்தில், தெற்கிலிருந்து காற்றடித்தால், 'தென்றல் வீசுகிறது; கதவைத் திறடா' என்கிருன். இன்னும் சொல்லப்போனுல், ஆண்டவனுக்கே, வடக்கு என்ருல் ஆகவில்லை; திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளே தென் திசையைப் பார்த்துக்கொண்டு, வட திசையில் முதுகைக் காட்டித்தான் படுத்திருக்கிருராம்! 'வடநாட்டைப் பார்க்கக் கூடாது' என்று கருதி, இலங்கையை நோக்கி அவர் படுத்திருக்கிருர்! இன்னும், 'வடக்கே தலை வைத்துப் படுக்காதே' என்ற பழமொழியும் தொன்றுதொட்டு வழங்கி வருகிறது, தமிழ்நாட்டில்!

"எனவே, வடநாட்டிலிருந்து எல்லாவகையிலும் பிரிந்திருக்கும் தென்னுட்டை, வடநாட்டுடன் ஒட்ட வைப்பது ஆகாது என்றுதான் நாங்கள் கூறுகிருேம்.

"தமிழனுடன் கன்னடரும், மலையாளியும், ஆந்திரரும் இனத்தால்-மொழியால்-பண்பால் சேர்ந்து வாழ முடியும்; ஆனுல், வடநாட்டு குசராத்தியரோடோ, முல்தானியரோடோ, மராட்டியரோடோ, பஞ்சாபியரோடோ சேர்ந்துவாழ முடியாது. தமிழனுக்கும்-மற்ற திராவிட இன மக்களான ஆந்திர-மலையாள-கன்னட மக்களுக்கும் உள்ள வேற்றுமை, மாடப்புருவுக்கும்-மணிப்புருவுக்கும் உள்ள வேற்றுமையைப் போன்றது; ஆனுல், தமிழனுக்கும்—வடநாட்டுக்காரனுக்கும் உள்ள வேற்றுமை மாடப்புருவுக்கும் வல்லூறுக்கும் உள்ள வேற்றுமையைப் போன்றதாகும்.

"மாடப் புருவும் மணிப்புருவும் ஒரே கூண்டில் வாழ முடியும்; ஆனுல், மாடப்புருவும் வல்லூறும் ஒரு கூட்டிலே வாழமுடியாது. ஆந்திரரும், மலையாளியும், கன்னடரும், தமிழரும் ஒரு கூட்டாட்சியின்கீழ் ஒன்றுபடலாம்; ஆனுல், தமிழனும் வடநாட்டானும் ஓராட்சியின்கீழ் இயங்க முடியாது"

—இவ்வாறு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 2—9—57-ல், சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை மக்கள் மன்ற ஆண்டுவிழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் பேசியதாவது:—

"வடக்கு-தெற்கு என்று பிரித்துப் பேசுவது கூடாது—ஆகாது என்போர் சிலர் நாட்டில் இருக்கின்ருர்கள். அண்மையில் அமைச்சர் பக்தவத்சலனுர், திருவாரூருக்கு அருகில் பேசுகையில் சில முத்துக்களை உகுத்திருக்கிருர். 'வடக்கு-தெற்கு என்பதைத் தவிர வேறு ஒன்றையும் இந்தத் தி. மு. கழகத்தவருக்குப் பேசத் தெரியாது' என அவர் கூறியிருக்கிருர்.

"வடக்கு-தெற்கு என்று தி. மு. கழகம் மட்டுமே பேசவில்லை. அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளிலே இயற்கையாகவே இப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இன்று-நேற்று அல்ல; 2000 ஆண்டுகளாகவே பிரித்துப் பிரித்துப் பேசப்பட்டிருக்கிறது. 'வட ஆரியர்—தென் தமிழர்' என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசுநாயனுர், 'ஆரியன் கண்டாய்—தமிழன் கண்டாய்' என்று பிரித்துப் பாடியிருக்கிருர்.

"வைணவர்களிலேயே 'வடகலை—தென்கலை' என இரு பிரிவுகள் இருக்கின்றன. வட கலையார் வடக்கிலிருந்து வந்தவர்கள்; தென் கலையார் என்போர், இராமாநுசரால் வைணவராக்கப்பட்ட தென்னுட்டுத் தமிழர்கள். வட கலையாருக்கு வேதம் சமஸ்கிருதத்திலிருக்கும்; தென் கலையாரின் வேதம் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்; மற்றும், ஆழ்வாராதிகளால் பாடப்பெற்ற தமிழ் நூல்களை ஒட்டியிருக்கும்.

"எந்த நாடும் 'கிழக்கு-மேற்கு' என்றிருக்கவில்லை; 'வடநாடு—தென்னுடு' என்றுதான் இருக்கின்றன. 'தென் ஆப்பிரிக்கா—வட ஆப்பிரிக்கா'; தென் அமெரிக்கா—வட அமெரிக்கா' என்ற அடிப்படையிலேதான் தென் இந்தியாவும்—வட இந்தியாவும் பிரிக்கப்பட்டுள்ளன.

"இந்தியாவும் கிழக்கு—மேற்கு என்று பிளவுபடாது, அரசியல், சமூகம், பொருளாதாரம், இன, மொழி, கலை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் அனைத்திலும் 'தெற்கு—வடக்கு' என்றே பிளவுபட்டிருக்கிறது.

"மொழியிலே, 'வடமொழி—தென் மொழி' என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிரிக்கப்பட்டிருக்கிறது.

"இன்று நாங்கள் மட்டும் இப்படிப் பிரித்துப் பேசவில்லை; காங்கிரஸ்காரர்களே — தேசியவாதிகளே எல்லாவகையிலும் 'வடக்கு—தெற்கு' என்று பிரித்து வைத்திருக்கின்றனர்.

"வட இந்திய பத்திரிகையாளர் சம்மேளனம்—தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனம்; வட இந்திய வர்த்தக சங்கம்—தென்னிந்திய வர்த்தக சங்கம்; வட இந்திய நடிகர் சங்கம்—தென்னிந்திய நடிகர் சங்கம்; வட இந்திய கிரிக்கெட் சங்கம்—தென் இந்திய கிரிக்கெட் சங்கம்; வட இந்திய சங்கீதக் கழகம்—தென் இந்திய சங்கீதக் கழகம்; வட மண்டல சபை—தென் மண்டல சபை; இப்படியெல்லாம் பிரித்துவைத்துச் செயலாற்றி வருபவர்கள் யார்? நாங்களா?

"ஒரு காலத்தில் தென்னுடு முழுவதும் பரவியிருந்த தமிழ், சமஸ்கிருத மொழிக் கலப்பால் தெலுங்கு, மலையாளம், கன்னடமாகப் பிரியநேர்ந்தது. இதைத்தான் 50 ஆண்டுக்கு முன்பு வாழ்ந்த 'மனோன்மணீயம்' ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் கூறியிருக்கிருர். தொல்காப்பியரும், 'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகு' என்று குறிப்பிட்டுள்ளார்.

"மொழியிலே ஏற்பட்ட சில வேற்றுமைகளைத் தவிர, மற்றப்படி எதிலும் தமிழனுக்கும், மற்றத் திராவிட இன மக்களுக்கும் வேற்றுமை கிடையாது. தெலுங்கு, மலையாள, கன்னட மொழிகளைப் பேசும்போது, அவற்றை ஓரளவு தமிழன் புரிந்துகொள்ளமுடியும்; ஆனுல், வடநாட்டார் பேசும் இந்தியில் ஒரு சொல்கூட நமக்குப் புரியாது.

நல்ல தமிழ் வழங்கிய பகுதியான கோழிக்கோடு இன்று அசல் மலையாளமொழி பேசும் பகுதியாக உள்ளது.

"தமிழ் மன்னன் சேரன் செங்குட்டுவன் தலைநகராகக் கொண்டிருந்த வஞ்சிமா நகர் இன்று கேரள நாட்டின் பகுதியாக உள்ளது.

"மொழிநூல் ஆராய்ச்சிப்படிப் பார்த்தால், சேர நாடு என்பதுதான் கேரள நாடாக மாறியிருக்கிறது. தமிழிலேயுள்ள க, ச, ட, த, ப, ற என்னும் வல்லெழுத்துக்களை நீக்கி, ஞ, ங, ண, ந, ம, ன என்னும் மெல்லெழுத்துக்களை கூட்டி, கொஞ்சம் மூக்கைஅடைத்துக்கொண்டுபேசினுல் அதுதான் மலையாளமாக இருக்கிறது. இதுதான் தமிழுக்கும் மலையாளத்துக்கும் உள்ளவேற்றுமை. தமிழிலே சமஸ்கிருதத்தை அதிகமாகக் கலந்து பேசுவதனுல் அது தெலுங்காகவும், கன்னடமாகவும் மாறும் நிலையைக் காணலாம். திருநெல்வேலித் தமிழன் பேசும் தமிழுக்கும் சென்னைத் தமிழன் பேசும் தமிழுக்கும் இருக்கும் வேற்றுமையைப் போலத்தான் திராவிட மொழிகளுக்கிடையே உள்ள வேற்றுமைகள்.

"வடநாட்டு மொழிகளுக்கும்—தென்னுட்டு மொழிகளுக்குமுள்ள வேறுபாடுகள் ஏராளம். இதேபோல், நடையுடை, பழக்கவழக்கங்கள் அனைத்திலும் வடக்குவேறு — தெற்குவேறுதான். நமக்கும்—வடநாட்டாருக்கும், வெள்ளைக்காரனுக்கு அடிமைப்பட்டிருந்த ஒன்றிலேதான் ஒற்றுமை; மற்ற எதிலும் வேற்றுமைகள்தாம்."

பொதுச்செயலாளர் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு, மேலும் பேசுகையில், இன்றைய ஆட்சியாளர் தென்னுட்டுக்கு இழைத்துவரும் அநீதிகளை புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்டி, காங்கிரசை ஆதரிக்கும் ஏடுகளான 'ஆனந்தவிகடனு'ம், 'கல்கி.'யும் வடக்கு—தெற்கு என்று பிரித்து எழுதியிருப்பதைப் படித்துக் காட்டி விளக்கியதுடன், இது போன்ற மன்றங்கள் தி. மு. கழகத்துடன் என்றும் துணைநின்று ஆதரவு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இந்தித் திணிப்புக்குக் கண்டனம்

தியாகராயர் கல்லூரி மாணவர்கள் குமுறல்

சென்னை, செப். 1—

மத்திய அரசாங்க இந்தித் திணிப்புக் கொள்கையை எதிர்க்கும் பொருட்டு, சென்னை சர் தியாகராயர் கல்லூரியைச் சேர்ந்த 800-க்கு மேற்பட்ட மாணவர்கள் கடந்த ஆக. 29-ந் தேதியன்று மாலை வகுப்புகளுக்குச் செல்லவில்லை; அம்மாணவர்கள் அனைவரும் 'இந்தி ஒழிக' கட்டாயமாக 'இந்தியைத் திணிக்காதே' என்று முழங்கிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலம், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, ஸ்டான்லி சாலை, பிராட்வே ஆகியவற்றின் வழியாக உயர்நீதிமன்றக் கடற்கரையை அடைந்தது.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் தென்னுட்டவர்மீது இந்தி திணிக்கப்படக் கூடாது என்று ஆட்சியாளரைக் கேட்டுக்கொண்டும், கலைவாணர் என். எஸ். கே. மறைவுக்கு வருத்தம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விருதையில்:

விருதை, செப். 2—

தென்னுட்டு மக்களின் விருப்பத்திற்கு எதிராக மத்திய அரசாங்கம் இந்தித் திணிப்பில் ஈடுபட்டுள்ளதைக் கண்டித்துப் பல கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து சன்நாயக அடிப்படையில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

இன்று விருதுநகரில் உள்ள கல்லூரி மாணவர்கள் சுமார் 900 பேர் வகுப்புகளுக்குச் செல்லாமல், ஊர்வலமாகச் சென்று, 'இந்தியைத் திணிக்காதே' என்று முழக்கமிட்டு, தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்து கூட்டத்தில் தீர்மானம்நிறைவேற்றியுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கலைவாணர் என். எஸ். கே.

அனுதாபக் கூட்டம்

6—9—57 வெள்ளி மாலை 6-மணிக்கு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில்

அண்ணு

அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலைவாணரின் நற்பணியைப் பற்றிய புகழுரை வழங்குவார்கள்.

★

மாலை 5-மணிக்கு கலைவாணரின் பாடல்கள் (இசைத் தட்டு) ஒலிபரப்பப்படும்.

—தி. மு. கழகம் (42-வது வட்டம்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3—9—57 செவ்வாய்

சுதந்திர மலேயா!

மலாய் நாடு அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டது. அதை அங்குள்ளார் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்—விழா கொண்டாடி உள்ளனர். அம் மகிழ்ச்சியில் நாமும் பங்கு கொள்ளுகின்றோம்.

மலாய் நாடு இன்று பெற்றுள்ள அரசியல் சுதந்திரம் முழு அளவில் உள்ளது அல்ல என ஒரு சிலர் வாதிடுகின்றனர். அவ்வாதத்தில் உண்மை ஓரளவு இருக்கத்தான் இருக்கிறது.

மலாய் நாடு பெற்றுள்ள அரசியல் சுதந்திரம் நிறைவுடையதா இல்லையா என ஆராய்வதைவிட, இன்று பெற்றுள்ள அளவு சுதந்திரத்தைக்கூட மலாய் நாடு பெறுவதில் இருந்துவந்தத் தடைகளை முதற்கண் கருதிப் பார்க்கவேண்டியது இன்றியமையாததாகும். அப்படிக் கருதும் பொழுது, மலாய் இன்று பெற்றுள்ள அளவு சுதந்திரம் பெற்றிருப்பதே அரசியல் புதிராகும்.

மலாய் நாட்டின் குடிகளாக உள்ளவர்கள் அனைவரும் மலாய் தேசிய இனத்தவர்களல்லர் அங்கு பலதிறப்பட்டவர்கள் உள்ளனர். அப்பலதிறப்பட்டவர்களில் சீனாவிலிருந்து குடியேறிய சீனர்களும், இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து குடியேறிய 'இந்தியர்'களும் முக்கியமானவர்களாவர். குடியேறிய இந்தியர் எனப்படுகின்றவர்களில் பெரும் தொகையினராக இருப்பவர்கள் தமிழர்களாவர்.

மலாய் மக்களின் எண்ணிக்கைக்கு அடுத்த நிலையில் மிகுந்த எண்ணிக்கைக் கொண்டிருப்பவர்கள் சீனர்கள். அதற்கு அடுத்த இடத்தில் இருப்பவர்கள் 'இந்தியர்'கள்.

மலாயர், சீனர், இந்தியர் ஆகிய மூன்று வகை இன மக்களும், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அல்லது மலாய் நாட்டில் அரசியல் உரிமைக்கு அணிதிரள, ஒன்றுபடுவதும், அவ்வாறு ஒன்றுபட்டு ஒருமித்த கோரிக்கை வெளியிடுவதும், மலாய் நாட்டின் அரசியல் சுதந்திரத்திற்கு இருந்து தீரவேண்டிய முன்னேற்பாடாகும். அம்முன்னேற்பாடு எடுக்கக்கூடிய உருவத்தின் தன்மையைப் பொறுத்துத்தான், மலாய் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய அரசியல் சுதந்திரத்தின் தரமும் அமைய முடியும்.

'பிரி—ஆள்' என்ற செயல்முறை, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அரசியல் உயிர் மூச்சு என்பது பொதுக் கருத்து. அதில் ஓரளவு உண்மைதான் உண்டு என்பது சிலரது நம்பிக்கை. அக்கருத்தின் அளவு எப்படிப்பட்டதாக இருந்தாலும், 'பிரி—ஆள்' என்ற ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அரசியல் செயல்முறையைத் தகர்த்தெறிந்துவிட்டு, தங்களுக்குள்ளாக ஒன்றுபட்டு அரசியல் உரிமை கோருவதற்குரிய வியத்தகு ஒற்றுமையை, மலாய் நாட்டு மக்கள் எய்திவிட்டனர் என்பது, மலாய் சுதந்திர விழாவின் மூலம் உலகுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மலாய் நாட்டின் மொத்த மக்கள் தொகை பதினைந்து கோடி. அவர்கள் பல இனம், பல மதம், பல கலாசாரம் கொண்டவர்களாக உள்ளனர். இவர்களுக்குள்ளாக அரசியல் ஒற்றுமையைக் காண்பது என்பது இலகுவானதல்ல. உள்ளொன்று வைத்து வெளியொன்று நயம்பட உரைத்து, அவ்வொற்றுமையை உருவாக்க முடியாது. அவ்வகை முயற்சி, காலம் வருவதற்கு முன்பே இடை நடுவில் மணல் மேடு சரிவதுபோல் சரிந்துவிடும். அதற்கு உலக வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உண்டு.

உள்ளும்-புறமும் ஒத்திருக்க வேண்டியது இன்றியமையாத் தேவையாக இருப்பது போன்றே, அம்முயற்சியில் தலையிடுகிறவர்களுக்கு, அம்முயற்சியில் பயிற்சியும் சிறந்த ஆற்றலும் நல்லெண்ணமும் அமைந்திருக்க வேண்டியதும் இன்றியமையாததாகும். அத்தகையவர்கள் மேற்கொள்ளும் தூய முயற்சியினால்தான், பல்வேறு வழிவந்த மக்களிடம் தேவைப்படுகின்ற அரசியல் ஒற்றுமையை உருவாக்கக் கூடும். இத்துறையில், மலாய் நாட்டில் உள்ள பலதரப்பட்ட மக்களிடை அரசியல் ஒற்றுமையை உருவாக்க,பிரச்சினையை நேரிய முறையில் தூய்மையுடன் அணுகி, இன்றைய நிலையில் வெற்றி கண்டிருப்பவர், நினைத்ததை முடித்திருப்பவர், மலாய்நாட்டிற்கு அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டி இருப்பவர் துங்கு அப்துல் இரகிமான் என்ற ஆற்றல் மிக்கவரேயாவர். அவர்தான் இன்று சுதந்திர மலாயாவின் பிரதமராக உள்ளார். அவர் கெடா அரசகுடிப் பிறந்தவர்என்பதுகருதத்தக்கது

இந்தியத் துணைக்கண்டம் ஆங்கில ஏகாதிபத்தியத்திடம் இருந்து அரசியல் துறையில் விடுதலை பெற்றபொழுதே, மலாய் நாட்டுக்கும் அரசியல் விடுதலை கிடைத்தாக வேண்டும் என எவரும் நம்புவது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். அந்த நம்பிக்கையை இலங்கைத் தீவின் அரசியல் விடுதலை உறுதிப்படுத்தி இருக்கக்கூடும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இருந்தாலும்—மலாய் நாட்டின் அரசியல் விடுதலை இன்றுதான் நிறைவேறி இருக்கிறது.

மலாயாவின் உள்நாட்டுப் பகுதியான மலைக்காடுகளில், உலகப் பெரும் போருக்குப் பிறகு தோன்றிஏறத்தாழஇரண்டாண்டுகள் முன்வரை பொதுவுடைமைக் கட்சியினர்எனப்படுவோர் புரிந்துவந்த வன்செயல்களைக் காட்டி, மலாயாவின் அரசியல் சுதந்திரத்தைத் தாம் இன்றுவரை தள்ளிப்போட்டு வந்ததாக ஆங்கில ஏகாதிபத்தியம் சொல்லக்கூடும். தனது இராணுவத்தை மலாய் நாட்டில் வைத்துக் கொண்டிருப்பதற்கும், மலாய் நாட்டுக்கு முழு அரசியல் சுதந்திரம் வழங்காமல இருப்பதற்கும், அதே காரணத்தைக் காட்டி ஆங்கில ஏகாதிபத்தியம் நியாயம் பேசவும் கூடும். அப்படியே ஆங்கில ஏகாதிபத்தியம் பேசவும் செய்கிறது.

இந்தக் குறைந்த அளவு அரசியல் சுதந்திரம்கூட தங்களின் வன்செயலால்தான் கிடைத்தது என மலாய் பொதுவுடைமைக் கட்சியினர் கூறினாலும், அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர்கள் மட்டுமே, அவ்வாறு உரிமை கொண்டாடுவதுடன் நில்லாது, அவ்வழி இயங்கி வரும் மற்றவர்களும் அவ்வாறே உரிமைகொண்டாடி வருகின்றனர். அது நாணயத்தின் ஒரு பக்கம். மற்றொரு பக்கமும் இருக்கின்றது.

மலாய் பொதுவுடைமைக் கட்சியினரின் வன்செயல் எதிர்காலத்திலும் தலைகாட்டக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாகவே, பிரிட்டிசு தொடர்புடன் கூடிய அரசியல் சுதந்திரத்திற்கும், பிரிட்டிசு இராணுவத்தைத் தனது மண்ணில் நிறுத்திவைத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்கும், மலாய் நாடு இணங்கவேண்டியதாயிற்று எனப் பிரதமர் துங்கு கூறக்கூடும். அக்கூற்றுதான் மேற்குறித்த நாணயத்தின் மற்றொரு பக்கமாகும்.

மலாய் நாட்டின் எதிர்காலம் எப்படிப்பட்டதாக இருந்தபோதிலும், இன்று அந்த நாடு பெற்றுள்ள அரசியல் சுதந்திரத்தை, அங்குள்ள பெரும்பாலோர் வரவேற்கின்றனர்—விழா கொண்டாடி மகிழ்கின்றனர். நாமும் அம்மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுகிறோம். சுதந்திர மலாயா வாழ்க—வெல்க என வாழ்த்துகிறோம்.

1957 ஆகஸ்டு 15-ந் தேதி வரை இந்தியாவில் மொத்தம் 20,20,000 டன் சர்க்கரை உற்பத்திசெய்யப்பட்ட; ஏற்றுமதிக்கு உட்பட,விற்பனைக்காக மொத்தம் 16,86,000 டன் சர்க்கரை வெளியில் அனுப்பப்பட்டது; ஆலைகளில் மொத்தம் 8·64 இலட்சம் டன் சர்க்கரை கையிருப்பில் இருந்தது.

'தமிழின் வளம் வற்றிவிடவில்லை'

'மறைந்துகிடக்கும் கருத்துச் செல்வத்தை வெளிப்படுத்தும் ஆற்றலும், நெஞ்சுரமும் நம்மிடமிருக்கின்றன'

'கடலை அடக்கியாண்ட தமிழன் சிறிய நீரூற்றுகளைக் கண்டு அஞ்சுவானேன்?'

'ஏழைகளுக்கு நீதி கிடைக்க சட்டங்கள் தமிழிலே இயற்றப்பட வேண்டும்'

சட்டக் கல்லூரி இலக்கியப் பேரவையில் அண்ணா அவர்களின் ஆய்வுரை

சென்னை, ஆக. 30—

"சட்டங்கள் மாறலாம்—மாற்றப்படலாம்; கட்சிகள் மாறலாம்—கலைக்கப்படலாம்; ஆட்சியும் அமைச்சர்களும் மாறலாம்—மாற்றப்படலாம்; ஆனால், தமிழ் மொழி அப்படியல்ல; 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நிலையான வளத்தைப் பெற்றுத் திகழ்கிறது. தமிழ் நம் தாய்மொழி என்பதனால் மட்டுமல்ல, அதை நாம் பாராட்டிப் புகழ்வது; ஒரு உயர்தனிச் செம்மொழிக்கு என்னென்ன இயல்புகள் இருக்க வேண்டுமென்று மொழிநூல் வல்லுநர்கள் கூறுகிறார்களோ, அவ்வளவும் தமிழுக்கு உண்டு. இலக்கணம், இலக்கியம், பண்பு, பொலிவு, வலிவு எல்லாம் தமிழிலே இருக்கின்றன.

"இன்று எல்லா அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்துடன், தமிழ் மொழி வளர்ச்சியில் நாட்டம் செலுத்துகின்றன. தமிழ், பேச்சு மொழியாக நாளுக்குநாள் புதுப் பொலிவு பெற்று வருவது தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்கும், தமிழக விடுதலைக்கும் நல்ல அறிகுறியாகும்."

இவ்வாறு நேற்று மாலை, சென்னை சட்டக் கல்லூரியில், நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், தமிழ் இலக்கியப் பேரவையைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இயற்றப்படும் சட்டங்கள், எல்லா மக்களுக்கும் விளங்கும் முறையில், மூடுமந்திரமில்லாமல் தமிழில் இருக்கவேண்டுமென்ற அரிய கருத்தினை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்; அதை நான் வரவேற்கிறேன்.

"குற்றவாளியல்லாத கணவன், மன்னன் ஆணைப்படி கொலைக்களத்திலே வெட்டுண்டு கிடப்பதைக்கண்ட கண்ணகி, பாண்டியன் அவைக்களம் சென்று வழக்குரைத்த கதையை நாம் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். கண்ணகி கூறிய அத்தகைய வாசகங்களை ஆங்கிலத்தில் தேடித் தேடிப் பார்த்தாலும் கிடைப்பதில்லை. ஆங்கிலத்திலேயே எழுதி, ஆங்கிலத்திலேயே கருத்துக்களை எடுத்துச் சொல்வதுதான் பலனளிக்கக்கூடியது என்று கருதி, ஆங்கிலத்தை ஓரளவு நல்லமுறையில் பயின்றவன் என்ற முறையில் நான் சொல்லுகிறேன் — தமிழிலுள்ள கருத்துச் செறிவுள்ள சொற்கள் ஆங்கிலத்தில் இல்லவே இல்லை. தமிழைத் துருவித் துருவிப் பார்க்கும்போதெல்லாம் புதுப்புதுக் கருத்துக்கள் கிடைக்கின்றன.

"'கலங்கரை விளக்கம்' என்ற சொல்லை, இப்பொழுதுள்ள மாணவர்கள் நன்றாக அறிவார்கள். ஒரு பத்தாண்டுகட்கு முன்பு, 'தீபஸ்தம்பம்' என்றால்தான் புரியும். தமிழ், இப்பொழுது நாம் எதிர்பார்ப்பதைவிட வேகமாக வளர்கிறது. 'தமிழ்ப் பேரவை', 'அமைச்சர்' என்ற வார்த்தைகளில்தான் எவ்வளவு கட்டுக்கோப்பு! இதை விடுத்து, அமைச்சரை 'மந்திரி' என்று அழைத்தால் அதில் ஏதோ ஒரு 'விகாரம்' தென்படவில்லையா?

"'அக்கிராசனர்' என்பதற்குத் 'தலைவர்' என்றும், 'சபை'க்கு 'மன்றம்' என்றும் இப்பொழுது வழக்கிலே வழங்குவதைக் காணும்போது நாம் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறோம்.

"'அமைச்சர்' என்பதை விட்டு 'மந்திரி' என்று ஏன் அழைக்க வேண்டும்? கண்ணகி இருக்க, மாதவி ஏன்? தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கள் நுழைவானேன்? நம்மிடையே நம் நிதி அமைச்சர் இருக்கும்போது, ஆங்கில நாட்டிலிருந்து பேராசிரியர் சால்டரை ஏன் நாம் அழைக்க வேண்டும்?

"நம் தமிழிலே வளம் வற்றவில்லை — மறைந்திருக்கிறது. மறைந்து கிடக்கிற வளத்தை எடுத்துக்காட்ட முடியும். அதற்கான ஆற்றல் நம்மிடமிருக்கிறது.

"நெய்வேலியில் மறைந்து கிடக்கும் பழுப்பு நிலக்கரியை தரைக் கடியிலுள்ள தண்ணீரை அப்புறப்படுத்தி எடுக்க முயற்சி செய்யப்படுகிறது. அதைப்போல,தொல்காப்பியத்தில் மறைந்து கிடக்கும் தமிழ்க் கருத்துச் செல்வத்தை நம்மால் வெளிப்படுத்த முடியும்.

"நெய்வேலியில் நிலக்கரியை வெளியில் எடுக்க, நீரூற்றுக்களின் தண்ணீரை இறைப்பதற்கு நீங்கள் காட்டும் உற்சாகத்தைப்போல மனதைப் பக்குவப்படுத்த முயன்றால், தமிழ்க் கருவூலம் நம் கைக்கு எட்டும்; 'சிலப்பதிகாரம்' போன்ற பேரிலக்கியங்களிலே நாம் பல வளத்தைக் காணமுடியும். அப்பொழுது தென்படும் பல நீரூற்றுக்களைக் கண்டு அஞ்சக்கூடாது.

"தமிழர்கள் கடல் கடந்து யவனத்திற்கும், சாவகத்திற்கும் சென்று வெற்றி கண்டவர்கள்; கடலை அடக்கி ஆண்டவர்கள்; இந்தச் சிறு நீரூற்றுக்களுக்கு அவர்கள் அஞ்சத் தேவையில்லை; மலைக்கவும் கூடாது.

"இன்று, தமிழர்களுக்கு ஓரளவு நெஞ்சுரம் ஏற்பட்டு வருகிறது.

"தமிழ் மொழிப் பற்றும், உணர்ச்சியும் கொண்டவர்கள் இன்று ஆட்சி மன்றத்திலிருக்கிறார்கள். தமிழ் வளர வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. சட்ட மன்றத்திலே நான் அவர்களை இது குறித்துப் பாராட்டிப் பேசியபோதுகூட, அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களின் பார்வை ஒரு அர்த்தத்தைக் கொடுத்தது. நான் பாராட்டுவதனால் ஏதேனும் அவர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடுமோ என அவர் நெஞ்சம் கொஞ்சம் அச்சப்படுகிறதோ என அஞ்சினேன். அத்தகைய பேராபத்து ஒன்றும் ஏற்படாது என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

"எண்ணத்தை வெளியிடும் ஒரு கருவியே மொழி என்ற கருத்தைக் கொண்டவனல்ல நான்; மொழி, எண்ணத்தை வெளிப்படுத்தும் கருவியும்தான்! அதே நேரத்தில் எண்ணத்தின் பிறப்பிடமும் அதுவே. எண்ணத்தின் ஆதி, அந்தம் எல்லாம் மொழிதான்.

"தமிழிலே உள்ள இரவல் சொற்களை விட்டுவிடுவதால் நமக்கு ஒன்றும் நஷ்டமில்லை. அதே நேரத்தில், அவை அவற்றின் உரியவர்களுக்கும் பயன்படும்.

"இரவல் அகன்றுவிட்டால் பிறகு, தமிழில், இது, அது எனப் பாகுபாடு செய்ய வேண்டிய அவசியமிருக்காது; குழப்பமும் ஏற்படாது.

"மொழி — வாழ்க்கையின் வழியதாகும் அதே நேரத்தில் அது ஒரு குறிப்பிட்ட தட்ப வெப்ப நிலைக்கேற்றவாறுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும் மசோதாக்கள்

'சட்ட நிபுணர்களின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும்'

சென்னை நிதி அமைச்சர் உறுதிமொழி

சென்னை, செப். 2—

சென்னை, சட்டக் கல்லூரியின் தமிழ் இலக்கியப் பேரவைத் துவக்கவிழா, 29—8—57 மாலை 5 மணிக்கு கல்லூரிக் கட்டிடத்தில் சிறப்புற நடைபெற்றது.

கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமைவகித்தார். அண்ணா அவர்கள் பேரவையைத் துவக்கிவைத்தார்.

அண்ணாவும் நிதி அமைச்சரும் சேர்ந்து ஒரே மேடையில் கலந்து கொள்ளும் முதல் பொதுநிகழ்ச்சி இது என்பதால் ஏராளமான கல்லூரி மாணவர்களும் பொதுமக்களும் கல்லூரி மண்டபம் முழுதும் நிரம்பியிருந்தனர்.

தமிழ்ப் பேரவையினர், நிதியமைச்சர் சுப்பிரமணியம், அண்ணா ஆகியவர்களுடன் அமர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அதன் பிறகு விழா துவங்கியது.

கல்லூரிப் பேராசிரியர் அ. பழனிச்சாமி, கல்லூரியின் டைரக்டர் எம். அனந்தநாராயணன், மாணவர் ஏ. கே. ஏ. அப்துல் சமது ஆகியோர் நிதியமைச்சர் அவர்களையும் அண்ணா அவர்களையும் மற்றவர்களையும் வரவேற்றுப் பேசினர்.

கல்லூரி டைரக்டர் பேசுகையில், கல்லூரியில் தமிழைப் போதனமொழியாக்குவதற்குத் தம் ஆதரவைத் தெரிவித்துக் கொண்டார்.

நிதியமைச்சர் தம் தலைமையுரையில், அண்ணாவும் தானும் ஒரே மேடையில் ஒருமுகமாக அமரும் வாய்ப்புக் கிடைத்தது இதுதான் முதல்தடவை என்றும், தமிழ் மொழியின் வளர்ச்சியைக் குறித்து இருவரும் ஒரே கருத்தைக் கொண்டவர்களாக இருப்பதையே இன்றைய நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது என்றும் அரசியலில் கருத்து வேற்றுமைகள் பல இருந்தாலும் தமிழைப் பொறுத்தவரை எவரும் மாறுபட்ட கருத்துடையவராக இல்லை என்றும் கூறினார்.

இயற்றப்படும் சட்டங்களைப் பாமர மக்களும் புரிந்துகொள்ளுகிற வகையில் தாய்மொழியில் ஆக்க வேண்டும் என்றும் எல்லா மக்களும் சட்டத்தைப் புரிந்து கொள்ள வழி செய்தால்தான் முழுச சுதந்திரம் பெற்றவர்களாக முடியுமென்றும் இப்படிச் செய்ய வேண்டுமானால் சட்டக் கல்லூரிகளிலும் நீதிமன்றங்களிலும் எல்லா நடவடிக்கைகளும் தமிழில் நடைபெற வேண்டுமென்றும் அரசாங்கம் இதற்கு ஆவன செய்ய முயன்று வருவதாகவும் கூறினார்.

அரசாங்கம் இயற்றுகிற சட்டங்களில் என்னென்ன குறைபாடுகள் என்பதைக் கண்டறியும் பொருட்டு, சட்ட நிபுணர்கள் அடங்கிய சட்ட ஆராய்ச்சிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இனி சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும் மசோதாக்களின் நகல்கள் இந்தச் சட்ட நிபுணர் குழுவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படுமென்றும் கூறினார்.

பொதுச்செயலாளர் சுற்றுப்பயணம்

★

செயங்கொண்டம்:

18—7—57 மாலை 6 மணிக்கு செயங்கொண்டம் தி. மு. க. சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் காந்தி திடலில் தோழர் அ. மெத்துசலா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் வை. இராசகோபால் வரவேற்புரையாற்றினார்; தோழியர் பா. கருணாநிதி நாட்டுப்பண்ணிசைத்தார்.

தி. மு. க. வின் வளர்ச்சிக் குறித்து தலைவர் பேசியபிறகு. தோழர்கள் பொ. தருமன், புலவர் ஆறுமுகம், திருச்சி அழகமுத்து ஆகியோர், தாழ்ந்த திராவிடத்தின் நிலையை விளக்கி, எதிர்காலத் திராவிடத்தை எழில் பூங்காவாக்க தி. மு. க. வழியில் அண்ணா பாதையில் திரண்டுவரக் கோரினர்.

அடுத்து பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேச எழுந்ததும் பல்வேறு கிளைக் கழகங்களின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

வரவேற்புக்கு நன்றி கூறிவிட்டு பொதுச் செயலாளர் அவர்கள், திராவிடநாட்டின் அவசியம் குறித்து பல மேற்கோள்களுடன் விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் செயங்கொண்டம் தி. மு. க. தோழர் கண்ணையன் குழந்தைக்குப் 'பாண்டியன்' எனப் பெயரிட்டார்.

செயலாளர் இராசகோபால், துணைச் செயலாளர் மூர்த்தி, செயற்குழு உறுப்பினர் கண்ணையன் ஆகியோரால் சேலம் தேர்தல் நிதிக்கு ரூ. 6 தரப்பட்டது.

கதிராமங்கலம்:

9—8—57 மாலை 6 மணிக்கு கதிராமங்கலம் பூங்காவில், தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் குடந்தை வட்ட செயலாளர் தோழர் பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. கோ. சி. மணி அவர்கள் பேசியபின் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரசியலில் தி. மு. கழகச் சாதனை பற்றியும், சட்டசபையில் தி. மு. கழக உறுப்பினர்களின் முழக்கத்தைப்பற்றியும், திராவிடநாடு வடநாட்டுப் பிடியிலிருந்து தனியாகப் பிரியவேண்டிய அவசியத்தையும் விளக்கிப் பேசினார்.

கதிராமங்கலம் தி. மு. க. சார்பில் சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக ரூ. 10 அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மற்றும் சுற்றுப்புற தி. மு. கழகக் கிளைகளின் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன

கூட்ட ஆரம்பத்தில குத்தாலம் தோழர் அரங்கநாதன் தம் குழுவினருடன் தி. மு. கழக சாதனைகள் பற்றிய இன்னிசை விருந்து அளித்தார்.

தோழர் கே. கோவிந்தராசுலு நன்றி நவின்றார்.

பரவை:

10—8—57 மாலை $4\frac{1}{2}$ மணியளவில் பரவையில் தி. மு. கழக புதிய கட்டிடத்தை பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்துவைத்துப் பேசினார்; கொடியேற்றியபோது வெடிகள் முழங்கப்பட்டன.

பொதுச் செயலாளருக்குப் பல தோழர்கள் கைத்தறி ஆடைகளும், மாலைகளும் அணிவித்தனர்.

தோழர் ப. சுப்பிரமணியம் அவர்கள் ஆண் குழந்தைக்கு பொதுச் செயலாளர் அவர்களால் 'மதியழகன்' எனப் பெயரிடப்பட்டது.

பொதுச் செயலாளர் அவர்கள் நாகையிலிருந்து வரும்வழியில் கருவேலங்கடையில் தோழர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

பரவையில் பொதுக்கூட்டம் முடிந்ததும் நெடுஞ்செழியன் அவர்கட்கும், மற்றையோருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. தோழர் பி. டி. கோவிந்தசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கழகச் செய்திகள்

வீரவநல்லூர்:

1—7—57-ல், தோழர் வி.எஸ். என். இராமசாமி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் இவ்வூர் தி. மு. கழகத் தோழரான சங்கரவேலாயுதம் இயற்கையெய்தியமை குறித்து அனுதாபம் தெரிக்கப்பட்டது.

சரக்கப்பிள்ளையூர்:

5—7—57-ல், தோழர் ப. கண்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சேலம் மாவட்டம் ஒமலூர் வட்டத்தைச் சேர்ந்த சரக்கப்பிள்ளையூர் தி. மு. கழகக் கிளைக் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.—செயலாளர்: ப. பழனியப்பன்; துணைச் செயலாளர்: அ. கோவிந்தன்; பொருளாளர்: இரா. கிருட்டினன்; மாவட்டப் பிரதிநிதி: அ. முத்து; செயற்குழு உறுப்பினர் 9 பேர்.

அம்பாசமுத்திரம் வட்டம்:

7—7—57-ல், தோழர் எஸ். இரத்தினவேல்பாண்டியன் தலைமையில் கல்லிடைக்குறிச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் அம்பாசமுத்திரம் வட்டத் தி. மு. கழகம் அமைக்கப்பட்டது. செயலாளர்: வி. எம். இரங்கசாமி; பொருளாளர்: எஸ். இரத்தினவேல் பாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்திற்கு 13 கிளைக் கழக உறுப்பினர்கள் வந்திருந்தனர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

பொன்மலை — மேலக்கற்கண்டார் கோட்டை:

6—7—57-ல், தோழர் என். முத்துகிருட்டினன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இடைக்கால நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: சி.எஸ். இராசு; துணைச் செயலாளர்: என். கோவிந்தராசன்; பொருளாளர்: சி. நடராசன்; மாவட்டப் பிரதிநிதி: பி. தங்கவேலு; செயற்குழு உறுப்பினர் 12 பேர்.

ஆமதாபாத்—மணிநகர்:

14—7—57-ல், தோழர் சு. கணேசனார் தலைமையில் நடைபெற்ற ஆமதாபாத்—மணிநகர் தி. மு. கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் வரவு-செலவுக் கணக்குகள் பரிசீலனைக்குப் பிறகு ஒப்புக்கொள்ளப்பட்டது. ஏழைகளைப் பாதிக்கும் மத்திய அரசின் வரி விதிப்புக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

சென்னை 40-வது வட்டம்

21—7—57-ல் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடந்த கூட்டத்தில், சென்னை சேப்பாக்கம் (40-வது வட்ட) தி. மு. க. கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஆ. வெ. செயராமன்; துணைச் செயலாளர்: சு. தானியேல்; பொருளாளர்: ந. கணபதி; மாவட்டப் பிரதிநிதிகள்: எம். கே. மணி; மு. பொன்னுரங்கம். செயற்குழு உறுப்பினர்கள் ஆறுபேர்.

தெப்பம்பட்டி:

23—7—57-ல், தோழர் பவுன்ராசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மதுரை மாவட்டம் தெப்பம்பட்டி தி. மு. க. கிளை அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: நா. இராமையா; துணைச் செயலாளர்: வி. சொக்கலிங்கம்; பொருளாளர்: வி. பவுன்ராசு; மாவட்டப் பிரதிநிதிகள் சொ. தங்கவேலு; சி. சக்கரை. செயற்குழு உறுப்பினர்கள் 7 பேர்.

ஆலப்பட்டி:

13—7—57ல் நடைபெற்ற நெல்லை மாவட்டம் ஆலப்பட்டி தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டத்தில், ஆலப்பட்டியில் குடிதண்ணீர் கிணற்றுக்கான நிலம் வாங்குவதற்கு தி. மு. க. சார்பில் ரூ. 100 கொடுப்பதென்றும், இதில் ரூ. 50 கடன் உதவியாக அளிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருமழிசை:

14—7—57-ல் தோழர் டி. கே. போரூரான் இல்லத்தில் நடைபெற்ற இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் புதிதாக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: தி. மு. எழுமலை; துணைச் செயலாளர்: டி. கே. சண்முகம்; பொருளாளர்: கை. சம்பந்தம்; செயற்குழு உறுப்பினர் 8 பேர்.

தண்டாரம்பட்டு:

15—7—57ல் தோழர் ஏ. நாமதேவ் தலைமையில் நடைபெற்ற தண்டாரம்பட்டு தி. மு. க. கிளையின் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஜி. இராமதாஸ்; துணைச்செயலாளர்: என். ஆர். நாமதேவ்; பொருளாளர்: ஆர் நாமதேவ்; செயற்குழு உறுப்பினர்கள் 7 பேர்.

பள்ளியாடி (நாஞ்சில் மாவட்டம்):

17—7—57ல் தோழர் எஸ். எம். சாகுல் அமீது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பள்ளியாடி தி. மு. க. கிளை அமைக்கப்பட்டது:—செயலாளர்: பி. ஆர். ராஜ்; துணைச்செயலாளர்: எஸ் ஞானசிகாமணி; பொருளாளர்: கே. இராதாகிருஷ்ணன்; மாவட்டப் பிரதிநிதிகள்: பி. சாம், எஸ். வி. அப்பன்.

தாரமங்கலம்:

17—7—57ல் தோழர் பெ. கு. முத்துசாமி தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: பெ.கு. முத்துசாமி; துணைச் செயலாளர்: கே. பி. குப்புசாமி; பொருளாளர்: எம். காவேரி; மாவட்டப் பிரதிநிதிகள்: பெ. க. முனியப்பன், பெ. கு. செங்கோடன்; செயற்குழு உறுப்பினர்கள் 15 பேர்.

சந்தைப் புதுப்பாளையம் (வ. ஆ.)

16—7—57-ல் தோழர் கா.மா. மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், துணைச் செயலாளர் தோழர் வி. பி. டி. சாமியின் விலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோழர் பி. முருகேசன் துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கழக ஆக்கவேலைகள் குறித்துப் பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவாரூர்:

14—7—57ல் நன்னிலம் வட்டச் செயலாளர் தோழர் அ. நடராசன் தலைமையில் நடைபெற்ற திருவாரூர் நகர தி. மு. க. கூட்டத்தில், தோழர் க. நாகப்பன் நகரச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திண்டிவனம் தி. மா. மு. கழகம்

28—6—57-ல் தோழர் இமயவரம்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திண்டிவனம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளையின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: கொள்கைக்கோ; துணைச் செயலாளர்: க. வெ. பாண்டியன்; பொருளாளர்: பாண்டியதாசன் செயற்குழு உறுப்பினர்கள் 6 பேர்.

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

பூதலூர்
அறந்தாங்கி
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேளூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி
(கரூர் வட்டம்)

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணப்பித்துக் கொள்க.

'கட்டாயக்கல்வி வரவில்லையே!'

புதுடில்லி, ஆக. 31—

"அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை தோல்வியடைந்துவிட்டதே; மத்திய அரசாங்க அமைச்சர்களை பொருளியல், சமூக வியல் ஆரம்பப் பள்ளிக்கு ஏன் அனுப்பக் கூடாது?"

என்று மக்கள் சபையில் உறுப்பினரொருவர் யோசனை கூறினாராம்.

"நாட்டில் இன்னும் கட்டாயக் கல்வி வரவில்லையே" என்று அவைத் தலைவர் கூறினாராம்!

இந்திய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு உள்ள திறமையைப் பற்றி மக்கள் அறிய இது நல்ல வாய்ப்பாகும்.

'பீகார் அரசாங்கத்தின் சட்டம் செல்லாது'

உரிமை நிலைக்க நீதிமன்றத்தில் சங்கங்கள் மனு

பீகார் அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது' என்று சுமீபத்தில் பீகார் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

அரசாங்க ஊழியர் ஒழுக்க விதிகளில் இதற்கான மாற்றமும் செய்யப்பட்டது.

'இந்த உத்தரவு செல்லத்தக்கதல்ல' என்று பாட்னா நீதிமன்றத்தில் ஆறு சங்கங்களின் சார்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

'இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள தனி நபரின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளது' என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

பாலக்காடு:

27—7—57-ல் தோழர் வி. கே. சாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பாலக்காடு நகர தி. மு. க. நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கே. பொன்னுசாமி; துணைச் செயலாளர்: யு. அம்சா; பொருளாளர்: உண்மைவிளம்பி; செயற்குழு உறுப்பினர்கள் 14 பேர்.

பெங்களூர்—சிவாஜி நகர்:

21—7—57-ல் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பெங்களூர் சிவாஜி நகர் தி. மு. க. கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர். அரங்கண்ணல்; துணைச் செயலாளர்: நாதன்; பொருளாளர்: அன்பன்; மாவட்டப் பிரதிநிதிகள்: பிரான்சிஸ்; மாதவன்.

புதுக்கோட்டை தி. மா. மு. கழகம்

புதுக்கோட்டை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் 18-7-57 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: அப்துல்கரீம்; துணைச் செயலாளர்: மெய்யப்பன்; பொருளாளர்: டி. பி. இராதாகிருஷ்ணன்;

கிழக்குத் திசையில் சுதந்திரத் தாரகை

மலேயா விடுதலை பெற்றது

யூனியன் கொடிக்கு 'சீட்டு'

கோலாலம்பூர், ஆக. 31—

அந்நிய ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்த மலேயா ஆகஸ்டு 30-ந் தேதி இரவு 12 மணிக்கு விடுதலை பெற்றது; பிரிட்டிஷ் ஆட்சி அகன்றது. மலேயா சுதந்திர நாடாக திகழத் துவங்கி விட்டது.

நாடு விழாக்கோலம் பூண்டது; மக்கள் மகிழ்ச்சி பெருக்கெடுத்தோடியது. 'மெர்டெகா' (சுதந்திரம்) என்ற முழக்கத்தை விண்ணதிர மக்கள் முழக்கமிட்டனர்.

விடுதலையடைந்த மலேயா காமன்வெல்த்தில் 10-வது நாடாகச் சேர்ந்தது.

கோலாலம்பூர் நகரத் திடலில் 50,000 மக்கள் இந்தச் சரித்திர சிறப்புப் பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

நள்ளிரவு 12 மணிக்கு மலேயா சுதந்திரம் பெற்றது; வெள்ளையரின் தேசியக் கொடியான 'யூனியன் ஜாக்' இறக்கப்பட்டது; மக்கள் ஆரவாரத்திற்கிடையே மலேயாவின் சுதந்திரக் கொடி பறக்கவிடப்பட்டது; மக்கள் வாழ்த்தினர்; நாட்டுப் பண் பாடப்பட்டது.

"கிழக்குத் திசையில் ஓர் புதிய தாரகை—ஆசிய மக்களுக்கு மற்றொரு சுதந்திரத் தாரகை உதயமாகிவிட்டது"

என்று மலேயா சுதந்திரம் பெற்றதைப் பற்றி முதலமைச்சர் துங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

ஐ. நா.-வில் மலேயா உறுப்பினர் நாடாகும்?

ஐ. நா. நிறுவனத்தில் சுதந்திர மலேயாவுக்கு அங்கம் வகிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று கோரி மலேயாவின் புதிய பிரதமர், ஐ. நா. நிறுவனத்தின் செயலாளருக்குத் தொலைவரிமூலம் தெரிவித்துள்ளார்.

மலேயாவின் கோரிக்கையை ஐ. நா. பாதுகாப்புக் குழு ஆராய்ந்து முடிவு செய்யும் என்று தெரிய வருகிறது.

சேலம் மெக்னீஷியம் உற்பத்தித் திட்டம்

கூட்டாகச் சேர்ந்து நிறைவேற்ற முயற்சி

புதுடில்லி, செப். 2—

சேலம் சேர்வராயன் மலையில் கிடைக்கும் இரும்புக் கனிகளிலிருந்து மெக்னீஷியம் கட்டிகள் உற்பத்திக்கான திட்டத்தை அமுல் நடத்துவதற்கான முயற்சிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

இந்தத் திட்டத்தை சென்னை-மத்திய அரசாங்கமும்-பிரிட்டிஷ் நிறுவனங்களும் கூட்டாக சேர்ந்து நிறைவேற்றக்கூடும். இதற்காக மொத்தம் ரூ. 40 இலட்சம் செலவாகுமாம்.

அடுத்த ஒரு கிழமையில் மத்திய அரசாங்கத்துடன் இந்தத் திட்டத்திற்கான ஆக்கவேலைகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படுமாம்.

கலைவாணருக்கு நினைவுச் சின்னம்

தென்னிந்திய நடிகர் சங்க முயற்சி

சென்னை, செப். 3—

மறைவெய்திய கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு சென்னையில் ஓர் நினைவுச் சின்னம் ஏற்படுத்த தென்னிந்திய நடிகர் சங்கம் முயற்சிகள் செய்து வருகிறது.

சென்னை நகரின் முக்கிய இடம் ஒன்றில் கலைவாணரின் உருவச் சிலையொன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உருவச் சிலையை மவுண்ட்ரோடு ஜிம்கானா கிளப்புக்குப் போகும் வழியில் (முன்பு வெலிங்டன் சிலை இருந்த இடத்தில்) வைக்க தென்னிந்திய நடிகர் சங்கம் விரும்புவதாகத் தெரிகிறது. இதற்கான அனுமதியை வழங்கும்படி சென்னை அரசாங்கத்திடம் நடிகர் சங்கம் கேட்கும். மற்றும், கலையுலகப் பிரமுகர்களும், அரசியல் தலைவர்களும் இம்முயற்சிகளில் அக்கறை காட்டி வருகின்றனர்.

★

குடும்பத்துக்கு நிதி உதவி

செலவின்றித் திரைப்படம் எடுத்து வெளியிட முடிவு

கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் குடும்பத்திற்கு நிதியுதவும் பொருட்டு, பலரது ஒத்துழைப்பைக் கொண்டு ஒரு திரைப்படம் எடுக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

இப்படித் தயாரிக்கும் திரைப்படத்துக்கான கதை, வசனம், பாடல், நடிப்பு, ஸ்டுடியோ வசதி, இசை, நடனம், டைரக்ஷன் எல்லாம் அவரவர்களால் எவ்வித ஊதியமுமின்றி இலவசமாக வழங்கப்படும்

இப்படத்துக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று அரசாங்கத்திடம் கேட்கப்படும்.

இப்படத்தைத் திரையிடுவதன் மூலம் வசூலாகும் பணம் முழுவதும் கலைவாணர் குடும்பத்துக்கு அளிக்கப்படும்.

இது சம்பந்தமாக, தென்னிந்திய நடிகர் சங்கம் இன்னும் சில தினங்களில் கூடிப் பேசி தக்க ஏற்பாடுகளைச் செய்வதற்கான குழுக்களை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது.

'பஞ்சசீல' நாட்டிற்குப் போர் விமானங்கள்'

லண்டன், செப். 3—

100 முதல் 200 ஜெட் விமானங்கள் 2 அல்லது 3 கோடி பவுன் மதிப்புக்கு இந்தியா பிரிட்டனிடம் ஆர்டர் கொடுத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை - ஆந்திர எல்லைத் தகராறு

'அவசரம் கூடாது' என்கிறார் முதலமைச்சர் காமராசர்

புதுடில்லி, செப். 1—

சென்னைக்கும்— ஆந்திரத்திற்குமிடையே உள்ள எல்லைத் தகராறு பற்றிய படாஸ்கர் தீர்ப்பை வெளியிட முடியாத இக்கட்டான நிலையில் டில்லி திண்டாடுகிறது.

இந்திய அரசாங்க உள்நாட்டு அமைச்சர் பந்துடன், ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியும், சென்னை முதலமைச்சர் காமராசரும் கலந்து பேச டில்லி சென்றனர்.

இந்தப் பேச்சு வார்த்தைகள் உருப்படியான முடிவுகளை உண்டாக்கவில்லை.

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறு இறுதியில் தீர்க்கப்படலாம் என்று இன்னும் எதிர்பார்க்கும் நிலையே உள்ளது.

படாஸ்கர் தீர்ப்பை பந்த் வற்புறுத்தவில்லையாம். இருமாநில அமைச்சர்களும் தங்களுக்குப் பிடித்தமான முடிவை அறிவித்தால் அதையே மத்திய அரசாங்கம் ஏற்கத் தயார் என்று பந்த் அறிவித்து, பழியையும் பொறுப்பையும், தவிர்த்துக் கொண்டாராம்.

ஆந்திர முதலமைச்சர், ஆந்திர மாநிலக் காங்கிரஸ் குழுவின் கூட்டத்தை முடித்துக் கொண்டு இம்மாதம் மூன்றாவது வாரத்தில் சென்னைக்கு வந்து காமராசருடன் கலந்து பேசக் கூடும் என்றும், ஒரு முடிவை உருவாக்க முயற்சிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

செப்டம்பர் 28-ந் தேதி நடைபெற இருக்கும் தென் மண்டலக் குழுவில் இரு முதலமைச்சர்களும் எல்லைத் தகராறு பற்றிய முடிவுக்கு சம்மதம் தெரிவிப்பார்கள் என்றும் கருதப்படுகிறது.

'இதைப் பற்றி ஒன்றும் அவசரப்படத் தேவையில்லை' என்று காமராசர் கூறிவிட்டு, டில்லியை விட்டுப் புறப்பட்டாராம்.

அண்ணு ஆய்வுரை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மக்களை அந்த நாட்டுக்குச் சொந்தமாக்குகிறது."

"எனவே, ஒரு மொழி—அதிலும் குறிப்பாக ஒரு குறிப்பிட்ட மக்களின் வாழ்க்கைக்கு வழியாகவும் இருக்கிறது என்ற எண்ணத்தினால்தான், அந்த மக்களது வாழ்வின் சகல துறைகளிலும் அதற்கு உரிய இடத்தைப் பெற்றுத் தரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

சட்டங்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன; அவை எல்லாம், எல்லா மக்களுக்கும் புரியத்தக்கவகையில் தமிழில் ஆக்கப்பட வேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

"இந்தக் கருத்தைத்தான், இன்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்குமுன், நான் ஒரு படத்தில் எழுதிக்காட்டியிருந்தேன். நமது நிதியமைச்சர் அவர்கள், அதிகமாகப் படம் பார்க்காதவர் என்பதால், அதனை இங்கு கூறுகிறேன்—'சட்டம் ஒரு இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; பிரகாசமான அந்த விளக்கை ஏழைகளால் எளிதில் பெறமுடிவதில்லை' என்று அப்படத்தில் நான் எழுதினேன்.

'பதினைந்து ஆண்டுகள் உருண்டோடிவிட்டன; இன்று, சட்டம் எல்லா மக்களுக்கும் தெளிவாகத் தெரிய வேண்டுமானல்—பிரகாசமான விளக்கை ஏழைகள் எளிதாகப் பெற வேண்டுமானல், சட்டங்கள் தமிழில் ஆக்கப்பட வேண்டும் என்றஎண்ணம் ஆக்கம் பெற்று வருகிறது-

"சிலர், 'தமிழில் இவை எல்லாம் ஆகுமா?' என்று கேட்கிறார்கள்; அவர்களுக்குச் சொல்லுவேன் — 'தமிழுக்கு இதற்கெல்லாம் தகுதி இல்லை என்று சொல்லாதீர்கள்; வேண்டுமானல் நாம் அதற்குத் தகுதியில்லாமல் இருக்கலாம்' —என்று!

"நமது நிதியமைச்சர் அவர்கள் தமிழ் மொழியில் ஆட்சி நடத்துவதற்காக அதற்கென ஒரு குழு நியமித்திருப்பது பற்றிச் சொன்னார்கள். ஆனல், நாடு நாம் எதிர்பார்ப்பதைவிட வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறது. இன்று, குழு வைத்திருப்பது பற்றி அமைச்சரவர்கள் தெரிவிக்கிறார். ஆனல் நெடுங்காலமாகவே, இதுபோல அமைக்கப்படாத பல குழுக்கள் தமிழ் நாட்டில் பணியாற்றியிருக்கின்றன."

'வானம்பாடி'

(கவிதை மாத இதழ்)

ஆசிரியர் : த. கோவேந்தன்

செப்டம்பர் 15-ந்தேதி

வெளிவருகிறது

ஆண்டு சந்தா ரூ. 2. — தனி இதழ் 17 காசு.

விவரங்களுக்கு :

'வானம்பாடி' — சைதாப்பேட்டை

வேலூர் — (வ. ஆ. மாவட்டம்)

கலைவாணர் அனுதாப இதழ்

'திராவிடன்'

7--9--57 இதழில்

என். வி. என்.

தீட்டும்

நான் கண்ட கலைவாணர்

என்னும் தலைப்பில் கலைவாணர் நமது இயக்கத்தின்பால் காட்டி வந்த அன்பும், ஆதரவும், குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளையும், பெரியார் ஈ. வெ. ரா., அண்ணு, என். எஸ். கே., சம்பந்தப்பட்ட மறக்கமுடியாத சம்பவங்களையும் விவரிக்கிறர்.

★

மற்றும் இதுசம்பந்தமான படங்களும், அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் எண்ணங்களும், பிற விவரங்களும் 7—9—57 திராவிடன் இதழில் வெளிவருகின்றன.

★

இவ்வார திராவிடன் இதழ் — தமிழ்க் குடும்பத்தின் நிலையான பொக்கிஷமாகும்.

12 பக்கங்கள் -- விலை 18 காசு

விவரங்களுக்கு :—'திராவிடன்' சென்னை-1.

காங்கிரசு உறுப்பினர்களின் பொறுப்பற்ற போக்கு!

புதுடில்லி, ஆக. 31—

சென்ற பொதுத் தேர்தலில், மக்கள் சபைக்கு 14 மாநிலங்களிலிருந்து மொத்தம் 500 பேர் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இத்தேர்தலில் நாட்டில் உள்ள எதிர்க்கட்சியினர்மிகச் சிலரே தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெருவாரியாக காங்கிரஸ் உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் சபை எந்த இலட்சணத்தில் இயங்கிவருகிறது என்று மதிப்பிட ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது.

இன்று காலை கூடிய மக்கள் சபையில், கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர், 30 நிமிட விவாதத்திற்கு சபைத் தலைவரின் அனுமதி கோரியிருந்தார்; விவாதத்திற்காக காலம் ஒதுக்கப்பட்டிருந்ததாம்.

காலை 11 மணிக்கு, மக்கள் சபை கூடியது; ஆனல் விவாதம் நடைபெறவில்லை. காரணம்? மக்கள்சபையை நடத்துவதற்குக் குறைந்தது 50 உறுப்பினர்களாவது இருக்க வேண்டும்; ஆனல், விவாதத்திற்குரிய நேரத்தில் 25 பேர்கள்கூட சபைக்கு வரவில்லையாம்!

போதிய உறுப்பினர்கள் வந்திராத காரணத்தால் சபை நடவடிக்கையை தள்ளிவைக்க வேண்டியதாயிற்றாம்!

ஒத்திவைப்பு!

சென்னை தியாகராயர் கவின் கலைக் கழகத்தில் 1—9—57-ல் எம். ஜி. இராமச்சந்திரன் படத்தை அண்ணு அவர்கள் திறந்துவைப்பதாக இருந்த நிகழ்ச்சி, கலைவாணரின் மறைவு காரணமாக ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

செப். 5 : திருநீர்மலை
6 : பெரும்பாக்கம்
7 : அரியலூர்
8 : வேலூர்
9 : மேட்டுப்பாளையம்
10 : வேடசந்தூர்
14 : துறையூர்
15 : காலை—திருச்சி சிறப்புச் சொற்பொழிவு
16 : வேலூர் — திருமணம்
18 : சின்னவாளவாடி
20 : சென்னை
21—22 : திருவண்ணுமலை மாநாடுகள்
26 : சென்னை
29 : கொளத்தூர்

சென்னை 1-வது வட்டத் தி. மு. க. சொற்பயிற்சிக் கூட்டம்

3—9—57 இரவு 7 மணிக்கு மேற்படி கூட்டம் கழகக் கட்டிடத்தில் (217 திருவொற்றியூர் நெடுஞ்சாலை) தோழர் வி. கே. சாமி தலைமையில் நடைபெறும். 'மொழிப்பற்று' என்னும் தலைப்பில் பலர் பேசுவர்.

சென்னை பால் திட்டம்

புதுடில்லி, செப். 3—

சென்னை பால் திட்டத்திற்காக ஆஸ்திரேலியா, கனடா, நெதர்லாந்து, அமெரிக்கா முதலான நாடுகளிலிருந்து ரூ. 36½ இலட்சம்வரை உதவி ஏற்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.